# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.12.2025 | தீபம் 41


# புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய

## ஆசிரிய மாணவர்களின் முன்வைப்புக்கள்

## தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் உட்பட பலரும் விதந்து பாராட்டு

2026 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட இருக்கின்ற புதிய கல்விச் சீர்திருத்தத்திற்காக ஆசிரிய மாணவர்களை தயார்படுத்தும் தேசிய கல்வி நிறுவகத்தின் வழி காட்டலில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் மேற்கொள்ளப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்த தரவட்டம் 11.11.2025 மற்றும் 12.11.2025 காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை நடைபெற்றது.

இதன்போது புதிய கல்விச் சீர்திருத்தத்தில் உள்ளடக் கப்படும் விடயங்கள் ஆசிரிய மாணவர்களால் குழு ரீதியாகவும் தனித்தனியாகவும் முன்வைக்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து ஆசிரியமாணவர்கள் தங்களுடைய கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஏனைய ஆசிரிய மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் கற்றல் பிரமிட் (Learning Pyramid) இல் விளைதிறன் மிக்க கற்றலாகிய பிறருக்கு கற்றுக்கொடுத்தல் (Teach to Others) என்ற கோட்பாட்டிற்கு இணங்க செயற்பாடுகளுடன் கூடிய புதிய கல்விச் சீர்திருத்த கற்றல் முறைகளை கலாசாலையின் ஏனைய ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கினார்கள்.

காலாசாலையின் இச்செயற்பாடு கலாசாலையின் முகநூல் பக்கத்தின் ஊடாக சமநேரத்தில் அளிக்கை செய்யப் பட்டது. இதனை பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பார்வையிட்டு பயன் பெற்றுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.







**01.11.2025 — 30.11.2025 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு**

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

# தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் ஆசிரிய கலாசாலைகளுக்கான இறுதி பரீட்சை

2023/2024 கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களுக்காக தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் இறுதி பரீட்சை எதிர்வரும் 09.12.2025 திங்கட்கிழமை தொடக்கம் 11.12.2025 புதன்கிழமை வரை இடம் நடைபெறவுள்ளது என தேசிய கல்வி நிறுவகம் அறிவித்துள்ளது.

2023/2024 கல்வியாண்டு அணியினருக்கான கற்கைநெறி 2025 டிசம்பர் மாதம் 12ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சைக்கான மதிப்பீடுகள் யாவும் தேசிய கல்வி நிறுவகத்தினரால் குறிப்பிடப்படும் தினங்களில் நடைபெறும் என அதிபர் தெரிவித்துள்ளார்.

பரீட்சையை எதிர்நோக்கவுள்ள அனைத்து ஆசிரிய மாணவர்களுக்கும் கலாசாலை சமூகத்தினர் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**National Institute of Education**

**Internal Examination of Teachers' Training Colleges -2025**
**Time Table**

**09th, 10th & 11th December 2025**

| Date | Time | |
|---|---|---|
| | 0900 hrs – 1200 hrs | 1300 hrs – 1600 hrs |
| 09-12-2025 | 403 - Health and Physical Education (Sinhala/Tamil) | 404 - Aesthetic (Sinhala/Tamil) |
| 10-12-2025 | 405 - Information and Communication Technology (English/Sinhala) / (English/Tamil) / (English) | 407 - Second National Language - Sinhala<br>408 - Second National Language - Tamil |
| 11-12-2025 | 401 - First Language - Sinhala<br>402 - First Language - Tamil | 406 - English |

A. r. a.
P.A. Herath
Director (Examinations) (Covering Duties)
National Institute of Education

M. V. Vithanapathirana
Prof. Manjula Vithanapathirana (PhD.)
Director General
National Institute of Education

கலாதீபம்
Kaladeepam
கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு
කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.
The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College

## நமது நோக்கு

**புதிய கல்வி சீர்திருத்த மதிப்பிட்டு முறையில் பாடசாலை மட்டத்தில் சர்வதேச மதிப்பீட்டு முறை அறிமுகம்**

**1. GPV என்றால் என்ன? (Grade Point Value)**

GPV என்பது ஒரு தனிப்பட்ட பாடத்தில் மாணவர் பெற்ற தரத்திற்கு (Grade) ஒதுக்கப்படும் எண் மதிப்பு ஆகும்.

பழைய முறைமையில் உள்ள A, B,C போன்ற எழுத்துத் தரங்களுக்குப் பதிலாக, இந்த புதிய முறையில் ஒவ்வொரு தரத்திற்கும் ஒரு குறிப்பிட்ட எண் மதிப்பு உதாரணமாக,

A =4.

B=3.

C=2 வழங்கப்படுகிறது.

**2. GPA என்றால் என்ன? (Grade Point Average)**

GPA என்பது மாணவர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் (உதாரணமாக, ஒரு தவணை அல்லது மொத்தப் பாடத் திட்டம்) கற்ற அனைத்துப் பாடங்களின் ஒட்டுமொத்த செயல்திறனைக் குறிக்கும் சராசரி தர புள்ளி ஆகும்.

இது அனைத்துப் பாடங்களிலும் பெற்ற GPV-களை சராசரி எடுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

**3. GPV+GPV+GPV = GPA என்பதன் பொருள்**

இந்த சூத்திரம் ஒரு குறியீட்டு (symbolic) வடிவமாகும். இது நேரடியாக கூட்டல் கணக்கு அல்ல.

இது, மாணவர் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற GPV மதிப்புகளின் கூட்டுத்தொகையை எடுத்து, மொத்தப் பாடங்களின் சராசரியைக் கணக்கிடுவதன் மூலம் இறுதி GPA பெறப்படுகிறது என்பதைக் குறிக்கிறது.

**GPA கணக்கீட்டின் பொதுவான சூத்திரம்:**

பொதுவாக, GPA என்பது பாடங்களின் பயன்பாட்டு அலகுகளையும் (Credit Hours) கருத்தில் கொண்டு கணக்கிடப்படுகிறது:

சுருக்கமாக: தனிப்பட்ட பாடங்களின் தரப்புள்ளி மதிப்புகளை (GPV-fis) அடிப்படையாகக் கொண்டு, மாணவரின் ஒட்டுமொத்த கல்வித் திறனை ஒரு ஒற்றை எண் மதிப்பால் (GPA) அளவிடும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மதிப்பீட்டு முறைமையே இந்தச் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சமாகும்.

# யாழ்.போதனா வைத்தியசாலை ஏற்பாடு செய்த நீரிழிவு நடை பவனியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகமும் இணைந்தது

நவம்பர் 14 ஆம் திகதி நீரிழிவு நாளை முதன்மைப் படுத்தும் வகையில் யாழ். போதனா வைத்தியசாலை சமூகத்தினரால் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி நடத்தப்பட்டது

காலை ஆறு முப்பது மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஆரம்பமான நடைபயணம் பலாலி வீதியை அடைந்து கந்தர்மடம் ஊடாக கே.கே.எஸ் வீதியை அடைந்து மீண்டும் யாழ் நகரை வந்தடைந்தது.

போதனா வைத்திய சாலையின் அழைப்பை ஏற்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் 25 பேர் வரையில் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ்த்துரை வழங்கினார்





# News in Brief - Month of November

**04.11.2025**
**Assembly**

**"Updating the New Education Reforms to College Teacher Students".**

Velummayum Senthan, a lecturer at the college, delivered the introductory speech on the theme of New Reforms. Following this, the College Teacher Students made their presentations. This action was praised by many.

**14.11.2025**
**Kopay Teachers' College community also joined the diabetes walk organized by the Jaffna Teaching Hospital.**

Our College Accepting the invitation of the Teaching Hospital, lecturers and Teacher Students of KTC 25 members participated in the event.

The Principal of the College, S.Laleesan, delivered a blessing massage at the event.

**19.10.2025**

**Assembly**

The events were moderated by S. Chandrakumar, Teacher student of the Maths Course. Science Course Teacher Student E. Senthurselvan delivered a speech awareness about diabetes.

Varani Central College Principal R. Kogularagavan participated as the guest.

**26.11.2025**

**Assembly**

**World Tolerance Day**

The event, chaired by the College Principal, S.Laleesan, the guest speaker, Chavakachcheri Hindu College Principal Nataraja Sarveswaran.

An excellent psychology-based speech delivered by the Principal of Chavakachcheri Hindu College, Mr. N. Sarveswaran, on the subject of facing problems is good.

**26.11.2025**

**Oli Vilaz Competition**

Events Competitive events were held on the evening of 26.11.2025 at the Kopay Teachers' College in view of the upcoming Oli vilaz to be held on 03.12.2025.

**Carol Singing - Group**

**First Place Second Year College Teacher Students**

**Logo Making - Individual**

**First Place**

Dhanusayini Kaviraj

**Second Place**

A.M.V. Pharsana

**Third Place**

S.Parthima Nusla

# கலாசாலையில் புதன் ஒன்றுகூடல்

## அதிதிப் பேச்சாளராக வரணி மத்திய கல்லூரி அதிபர் இ.கோகுலராகவன் கலந்து கொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித விஞ்ஞான மன்றம் முன்னெடுத்த நிகழ்வு 19.10.2025 காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலஷ்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுகளை கணிதநெறி ஆசிரிய மாணவன் செ.சந்திரகுமார் நெறிப்படுத்தினார்.

விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர்ச்செல்வன் நீரிழிவு பற்றிய விழிப்புணர்வு வழங்கியதோடு நீரிழிவு தொடர்பான காணொளியையும் தயாரித்து காட்சிப்படுத்தினார்.

இந்நிகழ்வில் அதிதிப் பேச்சாளராக வரணி மத்திய கல்லூரி அதிபர் இ.கோகுலராகவன் கலந்து கொண்டார்.

பயிற்சி ஆசிரியராக பயணத்தை ஆரம்பித்து பாட-சாலை அதிபராக உயர்வு பெற்றமையை பற்றிய தனது மனப்பதிவுகளை ஆசிரிய மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டார்.

அதிதிக்கான அறிமுக உரையை பிரதி அதிபர் த.கோபாலகிருஷ்ணன் ஆற்றினார்.

அதிதியாக கலந்துகொண்ட அதிபர் இ.கோகுலராகன் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.











# கலாசாலையில் புதன் ஒன்றுகூடல்
# புதிய கல்விச் சீர்திருத்தத்தை மாணவர்களுக்கு இற்றைப்படுத்தல்
# கலாசாலை விரிவுரையாளர் வேலும்மயிலும் சேந்தன் அறிமுக உரை ஆற்றினார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இவ்வார ஒன்று கூடல் 03.11.2025 அன்று முன்னெடுக்கப்பட்டது

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

புதிய கல்விச் சீர் திருத்தத்தினை ஆசிரிய மாணவர்களுக்கு இற்றைப்படுத்தல் என்ற கருப்பொருளில் கலாசாலையின் விரிவுரையாளர் வேலும்மயிலும் சேந்தன் அறிமுக உரையை ஆற்றினார்.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்கள் ஆசிரிய மாணலர்களாலும் கலாசாலை விரிவுரையாளர்களாலும் வரும் வார ஒன்று கூடல்களில் முன்வைக்கப்படும் என கலாசாலை அதிபர் தமது நிறைவுரையிலே தெரிவித்தார்.

Meta Cognitive Skill (மீ அறிகைத் திறன் ) பற்றிய ஆவணக் காணொளியை முதலாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் காட்சிப்படுத்தினார்

இந்நிகழ்வுகளை முதலாம் வருட விசேட கல்வி நெறி ஆசிரிய மாணன் த.தர்சன் முன்னிலைப் படுத்தினார்.









# கலாசாலையில் புதன் ஒன்றுகூடல்
# உலக சகிப்புத்தன்மை நாள் தொடர்பான நிகழ்வுகள்
## அதிதிப் பேச்சாளராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 26.11.2025 அன்று இடம்பெற்ற ஒன்று கூடல் நிகழ்வு உலக சகிப்புத்தன்மை நாளை முன்னிறுத்தும் வகையில் நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் நடராஜா சர்வேஸ்வரன் கலந்துகொண்டார்.

பிரச்சினை வருவது நல்லது என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வை ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் நெறிப்படுத்தினார்.

ஆசிரிய மாணவி தினேஸ் கௌசியா உலக சகிப்புத் தன்மை நாள் பற்றிய விழிப்புணர்வு உரையை ஆற்றினார்.

சகிப்புத்தன்மை பற்றிய ஆவணக் காணொளியை ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் காட்சிப்படுத்தினார்.

அதிதிக்கான அறிமுக உரையினை விரிவுரையார் இ.நிமல் நிகழ்த்தினார்.

அதிதியாக கலந்துகொண்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் சர்வேஸ்வரன் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.











# கலாசாலையில் ஒளி விழா போட்டிகள் ஆரம்பம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் எதிர்வரும் 03.12.2025 நடைபெற உள்ள ஒளி விழாவை முன்னிட்டு கிறிஸ்தவ மன்றத்தினரால் முன்னெடுக்கப்படும் போட்டி நிகழ்வுகள் 26.11.2025 மாலை கலாசாலையில் இடம்பெற்றது.

**1. கரோல் கீதம் இசைத்தல் - குழு**

முதலாம் இடம் - இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் அணி

இந்நிகழ்விற்கு நடுவர்களாக

Mrs Mariathayani Wotkinson
Sunday School Teacher
St.Michacal Church
Urumpria

Mrs Dalsee Ranjithrichard
Teacher
Kn/Mukkompan M.V
Poonagari

Mrs Tharmini Nagaselvam
Lecturer
Kopay Teaches| college

கலந்து சிறப்பித்தனர்

**2. சின்னம் தயாரித்தல் - தனி**

**முதலாம் இடம்**

தனுசாயினி கவிராஜ்

**இரண்டாம் இடம்**

ஏ.எம்.எவ் பர்சானா

**மூன்றாம் இடம்**

எஸ்.பார்த்திமா நுஸ்லா

இந்நிகழ்விற்கு நடுவர்களாக

Mrs Sharmila Baskaran
Lecturer
Kopay Teaches| College

Mrs Damila Ajanthi Thararaban
Teacher
J/Mandaitivu M.V

Mrs Sivatharshini Jeyaram
Lecture
Kopay Teaches| college

கலந்து சிறப்பித்தனர்












# ஆளுமைச் சிறப்பிதழ்

## பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு
## ஓய்வுநிலை (பிரதி அதிபர்)
## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

செவ்வி கண்டவர்: வேல் நந்தகுமார் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)





பவளவிழா நாயகர் பல்துறை ஆற்றலாளர் கலாசாலையின் ஓய்வு நிலை பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி திருநாவுக்கரசு அவர்கள்

எமது கலாசாலையில் இருந்து மாதந்தொறும் வெளிவரும் மின் ஆவண இதழாகிய கலாதீபம் இதழுக்கான இம்மாத இதழில் எமது கலாசாலையின் வாழும் பல்துறை ஆளுமையும் கலாதீபத்தின் வாசகரும் முன்னாள் ஒய்வுநிலை தமிழ்ப்பாட விரிவுரையாளரும் பிரதி அதிபரும் எனது குருவும் வழிகாட்டியுமாகிய திருநாவுக்கரசு ஐயாவின் வாழ்வியல் தரிசனத்தை அவரோடு மேற்கொண்ட நேர்காணல் அடிப்படையில் உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணு கின்றேன்.



**கேள்வி:**

**வணக்கம் ஆசானே தங்களுடன் ஏற்கனே உரையாடியதன் அடிப்படையில் கலாதீபத் திற்கான இந்த நேர்காணலை ஆரம்பிக் கலாம் என எண்ணுகிறேன். அந்த வகை யில் முதலில் உங்களது குடும்பச் சூழல் பிறப்பிடம் பற்றிய விடயங்களை பகிர்ந்து கொள்ள முடியுமா?**

பதில் :

நிச்சயமாக. அதற்கு முன்னர் கலாசாலையில் இருந்து ஒய்வு பெற்ற பின் னரும் எம்மைப் போன்றவர்களை மதித்து வாழும் காலத்தில் எம்மை கௌரவப் படுத்தும் உங்களது முயற்சிக்கு எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித் துக் கொள்கிறேன்.

எனது பெயர் திருநாவுக்கரசு. நான் பிறந்த இடம் அல்லைப்பிட்டி. பண்ணைக் கடலுக்கு அப்பால் தீவுப்பகுதியில் உள்ள முதல் ஊர். அந்த ஊரில் வாழ்ந்த செல்லையா இலட்சுமி இணையருக்கு மகனாக பிறந்தேன். எங்க ஊர் ஓர் மணற்பாங்கான விவசாயக் கிராமம். இரண்டு தங்கை ஒடு தம்பியுடன் பிறந்தேன். சகோதரர்கள் வெளிநாட்டில் உள்ளனர். நாங்கள் ஒரு சைவத்தமிழ் பாரம்பரியத்தில் வளர்ந் தவர்கள். இன்று அந்த கிராமம் கிறிஸ்தவர்களை அதிகம் கொண்ட கிராமமாக உள்ளது, முதலாம் வட்டாரம் தேர் ஓடும் ஆலயங்கள் கொண்ட கோயில் களை கொண்டுள்ளது..

கேள்வி:

நல்லது. சிறுவயது முதலே தங்களது கிராம வாழ்வியல் செல்வாக்கினால் ஒரு சைவத்தமிழ் சூழலில் வளர்ந்ததை அறியமுடிகிறது. தங்களது ஆரம்பகால கல்விப்பயணங்கள் பற்றிய விடயங் களை பகிர்ந்து கொள்ளமுடியுமா.

பதில்:

நிச்சயமாக. நான் எனது ஆரம்பக் கல்வியை கற்றது 1936 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம். இதில் அங்கு கிட்டதட்ட 450 மாணவர்கள் கற்றனர். பெருமளவற்கு இந்து மாணவர்கள் அருகே கிறிஸ்தவ பாடசாலையாக அல்லைப்பிட்டி றோ.க.த.க பாடசாலையும் இயங்கியது. விவசாய குடும்பமாகிய எமது குடும்பம் வறுமை கொண்டதாகவே இருந்தது. எனக்கு கற்பித்த ஆசிரியர்கள் என்றும் மறுக்க முடியாதவர்கள்.



கேள்வி:

ஆரம்பக்கல்வியில் சிறப்பான பல ஆசிரியர்களிடம் கற்ற அடித்தளமே உங்களை உயர வைத்தமையை அறிய முடிகிறது. இதேபோல வேலணை மத்திய கல்லூரியில் தொடர்ந்த உங்கள் இடைநிலைக் கல்வி பற்றிக் குறிப்பிட முடியுமா.

பதில்:

ஓம் .அங்கு விடுதி மாணவனாக இருந்து 5 வருடம் கல்வி கற்றேன். அப்போது அங்கே எட்டாம் வகுப்பிலேயே கணிதம் விஞ்ஞானம் என்று பிரித்து விடுவார்கள். அப்போது அங்கே இரண்டு வருடம் விஞ்ஞானப் பிரிவில் படித்து, பிறகு SSC பரீட்சை எடுத்து சித்தியடைந்தேன். அதன் பின்னர் குடும்ப வறுமை காரணமாகவும் எனது தாயாரின் இறப்பு காரணமாகவும் தொடர்ந்து படிக்க முடியாமல் போக குடும்பப் பாரத்தை தாங்க வேண்டிய நிலையில் தந்தையாருக்கு உதவியாக தோட்ட வேலையும் செய்து கொண்டு சிறிய சிறிய வேலைகள் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கேள்வி:

உங்களுடைய கதையை கேட்கும்போது துயரமாகவே உள்ளது அதற்கு பின் நீங்கள் செய்த அந்த சிறிய சிறிய வேலைகள் பற்றிக் குறிப்பிட முடியுமா.

பதில்:

ஆம். ஊரிலே உள்ள ப.நோ.கூட்டுறவு சங்கத்திலே ஓராண்டு காலம் தற்காலிக ஊழியராக பணியாற்றினேன். பின்னர் அதிலிருந்து விலகி அல்லைப்பிட்டி உபதபால் கந்தோரிலே ஐந்து வருடங்கள் பதில் தபால் ஊழியராக வேலை செய்தேன். அதற்குப் பிறகு நல்லவர்களின் உதவியால் யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்ததோரில் தந்தி கொடுக்கும் வேலையை முழுநேரமாகச் செய்தேன். அதன்பின் என் கல்வித்தகமையை கருத்திற்கொண்டு நல்லவர்கள் உதவியால் வண்ணார் பண்ணை தபால் நிலையத்தில் மூன்று மாதம் வேலைசெய்தேன். அதன் பிறகு அக்கால எமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகிய பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர் களது சிபாரிசினால் எனக்கு பஸ் நடத்துநர் வேலை கிடைத்தது. 1978 யூன் 15 தொடக்கம் 1984 யூன் 15 வரை பஸ் நடத்துனராக வேலை செய்தேன். அதன் பின்னரும் விடாமுயற்சியுடன் கல்வி மீது கொண்ட பற்றுதலால் நானாகவே படித்து பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை எடுத்து B.A .பட்டதாரியாக சித்தியடைந்தேன். அதன் பிறகு 1985 டிசம்பரில் பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்தது.




கேள்வி :

உங்களது கதையை கேட்கும்போது மெய்சிலிர்க்கிறது. உங்களை எண்ணி மிகவும் பெருமையாக உள்ளது. இவ்வளவு கடினமான பயணங்களுக்கு பிறகும் நீங்கள் ஆசிரியராகிக் கண்ட உயர்வுகள் பற்றிக் கூறமுடியுமா

பதில்:

ஆம் வெளிவாரி பட்டதாரியான எனக்கு நேரடியாக

பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்தது. என்னோடு முஸ்லீம்கள் உட்பட 150 பேருக்கு நியமனம் கிடைத்தது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லுரியில் சேவை முன் பயிற்சி முடிய எனக்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள மாதர்பனிக்கர்மகிழம்குளம் என்ற இடத்திலே உள்ள பாடசாலையில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அங்கே ஒரு ஐந்தரை ஆண்டுகள் பணி செய்தேன். வீதியின் அருகில் பள்ளிக்கூடம். O/L வரை வகுப்புகளைக் கொண்டிருந்தது. அங்கேயிருந்து நேரடியாக யாழ்ம்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு மாற்றம். அப்போது யுாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு எனக்கு மாற்றம் தருவதிலும் என்னை சிறப்பாக அங்கே அனுப்பி வைப்பதிலும் மறைந்த வடமாநில கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் அவர்களின் பணி பெரியது. 1991ஆம் ஆண்டு இறுதியில் இந்துக்கல்லூரிக்கு வந்தேன். அதன் பின்னர் 1992 ஆம் ஆண்டு பாடசாலையில் இருந்தவாறே முதன்மை ஆசிரியர் பணி செய்தேன் 1993, 94 இல் முழுமையாக பாடசாலையில் இருந்து விடுபட்டு யாழப்பாணம் நல்லூர்க் கோட்டத்தில் தமிழ்ப்பாட முதன்மை ஆசிரியராகப் பணியைத் தொடர்ந்தேன். நல்லூர் கோட்டத்தில் இருந்த 44 பாடசாலைகளை மையப்படுத்தி, ஆரியர்களுக்கான கருத்தரங்கு செய்வது உட்பட ஆசிரியர்களுடன் நல்லுறவை பேணி செயற்பட்டேன். சில சூழல்களால் அதிலிருந்து விலகி மீண்டும் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு ஆசிரியராக சென்றேன். அப்போதுதான் 95. இடம் பெயர்வு ஏற்பட்டது, அதனால் கிளிநொச்சி செல்ல வேண்டிய நிலை ஏற்பட, அங்கு சென்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக இணைப்பில் ஆசிரியப் பணியை தொடர்ந்தேன். பின்னர் அங்கிருந்து அக்கராயன் சென்று அங்கும் கொட்டில் போட்டு இயங்கிய பாடசாலையில் பணி செய்தேன் .பின்னர் 1998 ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டேன். அங்கே இருக்கும் போதுதான் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வெற்றிடம் இருப்பதாக காரை. சுந்தரம்பிள்ளை மற்றும் அதிபரின் சேர்வழி அறிந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர் பணிக்கு விண்ணப்பித்தேன்.



**கேள்வி:**

**இடர்களுக்குள் மத்தியிலும் தொடர்ந்தது தங்களது நீண்ட ஆசிரியப்பணியின் சிறப்புக்களை அறிந்தோம். இனி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தங்களது கல்வி பயணம் பற்றி குறிப்பிட முடியுமா?**

பதில்:

ஆம் என்னோடு புவனேந்திரன், இரத்தினவேல், மலர் சின்னையா ஆகியோர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 22.03.1999 இல் இணைந்து கொண்டோம். விரிவுரையாளராக கடமையாற்றி பின்னர் 24.08. 2000 முதல் நிரந்தர விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளேன். அங்கு 11 1/2 வருட விரிவுரையாளப் பணியில் தமிழ், தமிழ் கற்பித்தல்முறை, உளவியல், கல்வியியல் ஆகிய பாடங்களைக் கற்பித்தேன். சில காலம். பிரதி அதிபராகவும் கடமையாற்றினேன் 2007, 2008 கலைமலரின் பொறுப்பாசிரியராக விளங்க 500 க்கும் மேற்பட்ட தமிழறிஞர்களின் படங்களை ஆவணப்படுத்தினேன். 24.09.2010 கலாசாலையில் இருந்து ஓய்வு பெற்றாலும் 2012.01.15 வரை வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றினேன். முஸ்லீம் ஆசிரிய மாணவர்கள் உட்பட மிக சிறந்த ஆசிரிய மாணர்கள் பலருக்கு ஆசிரிய கலாசாலையில் கற்பித்தமை மனநிறைவை தருகிறது. இன்றும் பல ஆசிரிய மாணவர்கள் நன்றியுணர்வுடன் இருப்பதும் மகிழ்ச்சி. கலாசாலையில் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி சேர், கணபதிபிள்ளை சேர் கருணலிங்கம் சேர் ஆகிய அதிபர்களின் கீழ் பணியாற்றிய காலங்கள் மறக்க முடியாதவை.


பிரதம விருந்தினருக்கான கௌரவிப்பு

**கேள்வி:**

**நல்லது உங்கள் கல்வி, தொழிற்தகமை உயர்வுகள் பற்றிக் குறிப்பிட முடியுமா.**

பதில்:

நிச்சயமாக குறிப்பிடமுடியும். அந்த வகையில் 1994 இல் Dip.in.Education முதன்மைச் சித்தி பெற்றேன்.

பின்னர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியில் சித்தி பெற்றேன், 1987இல் தமிழ்ப்பண்டிதர் தேர்வில் சித்தி பெற்றேன். 1990 இல் சைவப் புலவர் பரீட்சையில் சித்தி அடைந்தேன். 1998 இல் தமிழில் முதுமானி பட்டத்தை பெற்றதுடன் 2002 இல் "டானியலின் எழுத்துக்கள்" என்ற ஆய்வுக்காக கலாநிதிப்பட்டத்தை பெற்றுக் கொண்டேன். இவ்விரு பட்டங்களின் ஆய்வு வழிகாட்டியாக பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் விளங்கினார். பின்னர் SLEAS பரீட்சையிலும் சித்தியடைந்தேன். இவ்வாறு பத்துக்கு மேற்பட்ட பட்டங்களைப் பெற்றேன்.

**கேள்வி :**

**உண்மையில் வியப்பாக உள்ளது. இதனைவிட தங்களது புலமையை மதித்தும் பல பட்டங்கள் வழங்கப்பட்டமையை நாம் அறிவோம். இவை எல்லாம் தங்களது விடாமுயற்சி கடின உழைப்பு, புலமைத்திறன். என்பவற்றுக்கு கிடைந்த அங்கீகாரங்கள் என்பதில் மகிழ்ச்சி. இதே போல தாங்கள் பாடநூல்கள் உப்பட காலற்தோறும் பல்வேறு பட்ட நூலாக்க முயற்சிகளிலும் ஈடுபட்டதையும் அறிவோம். அவற்றைப் பற்றி குறிப்பிட முடியுமா.**

பதில்:

நிச்சயமாக அவ்வகையில் இதுவரை 24 ர்க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி உள்ளேன். 1995 இல் சங்க காலம் முதல் தற்காலம் வரை செய்யுள் தொகுப்பு என்ற A/L மாணவர்களுக்கான நூலாக்க முயற்சியோடு தொடங்கிய இப்பயணத்தில் 2015 - 2018 காலப் பகுதியில் தரம் 10,11 தமிழ் இலக்கியத் தொகுப்பு தரம் 10 வரலாறு, சைவநெறி தரம் 9 தமிழ் க.பொ.த உயர்தர தமிழ் பாடத் தொகுப்புகள் போன்றவற்றை வெளியிட்டது. கலாசாலையில் இருந்த காலத்தில் அதிபர் கருணலிங்கம் அவர்களுடன் இணைந்து கல்வியியல் கோட்பாடுகள் என்ற நூலை எழுதினேன். மனப்பூக்கள் என்ற கவிதை தொகுதி ஒன்றை வெளியிட்டேன். டானியலின் எழுத்துகள் என்ற ஆய்வை நூலாக்கி வெளியிட்டேன். எண்ணங்களும் வண்ணங்களும், தோரணங்கள் போன்ற கட்டுரை நூல்களை வெளியிட்டேன். அத்துடன 2018 இல் உடுமலை தந்த கவிமலை என்ற நூலை சென்னை டிஸ்கவரி பதிப்பாக வெளியீடாக வெளியிட்டேன். இந்நூல் சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட நூலாக இருந்தது. அத்துடன் சாதனை சிகரம் நிந்தவூர் திருமதி மைமூனா செய்குலாதப்தீன் என்ற சிறப்பு மலராக்க முயற்சி நீர்வேலி, அல்லைபிட்டி, மண்கும்பான் கோயில்களின் கும்பாபிஷேகம், செல்லத்துரை சுவாமிகளுக்கான நூலாக்க முயற்சி, அல்லைப்பிட்டி ஆசிரியரின் அமுதவிழா மலராக்க முயற்சி போன்றவற்றையும் குறிப்பிடலாம். 2021 இல் மிகப்பெரும் தேடலோடு நான் வெளியிட்ட தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள் என்ற பெரும் தொகுப்பு நூல் அவ்வாண்டுக்குரிய சாகித்திய மண்டல பரிசையும் பெற்றது. நிறைவாக 2023 இல் வட மாகாண ஆசிரியர் கலாசாலைகள் பற்றி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இணைந்து அதன் நூற்றாண்டுக்காக எழுதிய நூல் முயற்சி வரை இதனை நீட்டி பேச முடியும்.

**கேள்வி:**

**உங்கள் ஆய்வு மற்றும் ஆக்க இலக்கிய முயற்சிகள்,**



**பாட நூலாக்க முயற்சிகள் பிரமிப்பை தருகின்றன. உடல்நிலை தளர்ந்த நிலையிலும் இவற்றைத் தேடி ஆய்வு செய்து தரும் தங்களது இத்தகைய முயற்சிகளுக்கு தமிழ்கூறும் நல்நூலகம் என்றும் நன்றிக் கடனாக இதுக்கும் என்பதில் ஐயமில்லை. இப்பணிகளுக்கு அப்பால் தாங்கள் மேற்கொண்ட வேறு பணிகள் பற்றி குறிப்பிட முடியுமா.**

பதில்:

நிச்சயமாக அதற்கு முன் இத்தகைய முயற்சிகளில் நான் என் கடமையை செய்தேன் என்ற ஆத்ம திருப்தி பெற்றதை பெரிதாக கருதுகிறேன். 2000-2015 வரை தேசிய கல்வி நிறுவக யாழ் பிராந்திய நிலைய பகுதி நேர விரிவுரையாளராக விளங்கி ஆசிரியர்களுக்கு கல்வியியல் தமிழ் சமயம் போன்ற பாடங்களை கற்பித்துள்ளேன். 1994 - 1995 வரை யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ துறையில் வருகைதரு விரிவுரையாளராக பணியாற்றியுள்ளேன். 2017 இல் இருந்து அண்மை காலம் வரை யாழ் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட தமிழ் முதுமாணிக் கற்கை நெறிக்கும் வருகை விரிவுரையாளராக கடமை ஆற்றியுள்ளேன். 2023 இல் யாழ் பல்கலைக்கழகத்தால்

நடத்தப்படும் பண்டித வகுப்புக்கும் வருகை விரிவுரையாளராக பணி புரிந்துள்ளேன். இதனை விட பல நூல் வெளியீடுகள் ஆய்வரங்குகள் என்பவற்றிலும் உரையாற்றி உள்ளேன். நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையில் பணியாற்றியுள்ளேன். பல நாடகங்களை எழுதியுள்ளேன். தெய்வீக பாடல்கள் உட்பட பல பாடல்களை எழுதியுள்ளேன். தற்போது எனது உடல் நிலையை கருத்தில் கொண்டு இவற்றை தவிர்த்து புங்குடுதீவு நெசவு கல்லூரியில் கற்பித்து என்னை திருமணம் செய்த அனலை தீவைச் சேர்ந்த என் மனைவியுடன் உறவுகளின் இடையிலான வருகைகளுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், நல்லுள்ளங்களின் வருகைகளுடன் நல்லூரில் உள்ள எனது இல்லத்தில் வசித்து வருகின்றேன். மரம் கனிகளால் அறியப்படும் என்பதை உணர்ந்தவன் நான். கிட்டத்தட்ட 20,000 மேற்பட்ட ஆசிரியர்களுக்கு கற்பித்துள்ளேன் என்று ஆத்ம திருப்தி உள்ளது. இன்றும் வாசிப்பு தேடலோடு தான் இருக்கின்றேன்.



கேள்வி:

**அண்மையில் பவள விழா கண்டிருக்கக் கூடிய தாங்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் எதிர்காலம் குறித்து ஏதாவது கூற விரும்புகிறீர்களா.**

பதில்:

நிச்சயமாக. நான் பணியாற்றிய ஒரே ஒரு கலாசாலை. அங்கே பல சிறந்த ஆசிரியர் மாணவர்களை குறிப்பாக முஸ்லிம் மாணவர்களை சந்திக்க முடிந்தது. அவர்களில் பலர் இன்றும் நன்றியுடன் மறவாமல் இங்கு வரும்போது என்னை வந்து சந்தித்துச் செல்வது மகிழ்ச்சி. அதன் நூற்றாண்டை ஒட்டி தற்போதைய அதிபரான ச.லலீசனின் வேண்டுகோளுக்கு அமைய வடக்கின் ஆசிரிய கலாசாலைகள் என்ற நூல் ஒன்றை வெளியிட்டமையும் ஆத்ம திருப்தி தரும் செயல்.

அந்த வகையில் எத்தனையோ பெருமை மிக்க நூற்றாண்டு கண்ட கலாசாலை. திடீரென அதன் பெயரும் புகழும் மங்கி செல்வதாக இக்கலாசாலையும் மூடப்பட்டு விடுமோ என்ற கவலை மனவேதனை ஏற்படுத்துகின்றது. யாழ்பா ணத்தைச் சேர்ந்த புத்தஜீவிகள், கல்விய லாளர்கள் இதனை தடுத்து இக்கலாசாலையை ஆசிரியர் களுக்கான பொருத்த மான ஏதோ சில கற்கை நெறிகளையோ, உயர் பயிற்சிகளையோ வழங்கும் நிறுவனமாக தொடர்ந்தும் இயங்க வைக்க வேண்டும். இல்லையென்றால் நாங்கள் எல்லாவற்றையும் இழந்த மாதிரி முகவரி இழந்த முகமாகத்தான் மாற வேண்டி ஏற்படும்.

நன்றி ஆசானே. உண்மையில் உங்களைப் போன்றோரின் வாழ்க்கை பலருக்கு ஒரு பாடமாக அமையக்கூடியது என்பதிலும் ஆசிரியத்துவத்தையும் கல்வியையும் இலக்கியத்தையும் போற்றும் உங்களை போன்றோரை வழிகாட்டியாக கொள்வதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். பவள விழா கண்டு வாழும் தாங்கள் இன்னும் பல்லாண்டு வாழ எங்கள் கலாசாலையில் கோயில் கொண்டு அருளும் யோகாம்பிகை சமேத யோகலிங்கேஸ்வர பெருமா னை வணங்கி கலாதீபத்துக்கான இந்நேர்காணலை செய்யும் வாய்ப்பை வழங்கிய கலாசாலை அதிபருக்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

